**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.**
**முன்னிலை – திரு. M. சூரியக்குமார், B.A.,L.L.B.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
போச்சம்பள்ளி.
2026 – ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் நாள் திங்கள் கிழமை

**Cr.M.P.No. 1819 /2024**
**in**
**STC .No. 224/ 2022**
**CNR.NO. TTNKI070006132022**

மணிமாறன் மனுதாரர்/ எதிரி

/எதிராக /

சௌமியா எதிர் மனுதாரர்/ புகார்தாரர்

இம்மனுவானது 25.11.2024 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னர் 11.05.2026ம் தேதி இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர். S. கபிலன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர். S.R.மாணிக்கபிரபு அவர்கள் ஆஜராகியும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 311ன் கீழ் மனு வழக்கில் விசாரணை செய்யப்பட்டுள்ள எ.த.சா.2 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1.** மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:

1(1). மேற்படி வழக்கில் மனுதாரர் / எதிரியின் தரப்பில் கிளை மேலாளர் இந்தியன் வங்கி, மத்தூர் கிளை அவர்கள் எ.த.சா.2 ஆக கடந்த 08.11.2024–ம் தேதியில் சாட்சியமளிக்கப்பட்டு மனுதாரர் /எதிரியின் தரப்பில் எ.சா.ஆ.4. எ.சா.ஆ.5 ஆக ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

1(2). மேற்கண்ட தேதியில் எ.த.சா.2–ஐ மனுதாரர்/எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரனை செய்த போது மனுதாரர்/எதிரியின் சேமிப்பு கணக்கின் STATEMENT OF ACCOUNT மற்றும் மேற்படி வழக்கு சார்ந்த சில முக்கிய ஆவணங்கள் கிடைக்கப் பெறாத காரணத்தாலும், மேற்படி வழக்கு கோப்பு அலுவலக மற்ற வழக்கு கோப்பில் கலந்துவிட்ட காரணத்தாலும், மேற்படி குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் சம்மந்தமாகவும் எ.த.சா.2–ஐ மனுதாரர்/எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரனையில் சில முக்கிய வினாக்கள் கேட்காமல் விடுபட்டுள்ளது.

1(3). தற்போது மனுதாரர்/எதிரியின் வங்கி கணக்கின் STATEMENT OF ACCOUNT சான்றிட்ட நகல் கிடைக்கப்பெற்றுள்ளது அதன் பேரில் தற்போது மேற்கண்ட எ.த.சா.2–ஐ மீண்டும் அழைத்து எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரனை செய்தால் தான் உண்மைநிலையை கனம் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த இயலும். ஆகையால் மேற்படி சாட்சியை மீண்டும் அழைத்து எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரனை செய்ய வேண்டியது அவசியமாகியுள்ளது. மேற்படி விசாரனை செய்யவில்லையெனில் மனுதாரர்/ எதிரிக்கு பெருத்த கஷ்டம் ஏற்பட கூடும்.

1(4). எனவே இம்மனுவானது மேற்படி வழக்கில் எ.த.சா–2–ஐ மீண்டும் அழைத்து மனுதாரர்/எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரனை செய்ய வேண்டி தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

எதிர்மனுதாரர் மனுவானது நிலுவையில் இருந்த போது எதிருரை ஏதும் இல்லை என்று குறிப்பிட்டதால் எதிருரை தாக்கல் செய்யபடவில்லை.

**3. <u>தீர்வு</u>**

இம்மனுவில் முடிவு செய்ய வேண்டிய முக்கிய அம்சம் என்னவென்றால் இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியதா என்பதே ஆகும்.

**4.** மனுதாரர் தரப்பில் குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 311ன் கீழ் மனு செய்து வழக்கில் விசாரணை செய்யப்பட்டுள்ள எ.த.சா.2 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. எதிரிதரப்பில் எந்தவொரு எதிருரையும் தாக்கல் செய்யப்படவில்லை இருதரப்பு வாதம் கேட்கபட்டது ஆவணங்கள் பரிசீலனைக்கு எடுத்தகொள்ளப்பட்டது

6. இம்மனுவானது எ.த.சா.2–ஐ மனுதாரர்/எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரனை செய்த போது மனுதாரர்/எதிரியின் சேமிப்பு கணக்கின் STATEMENT OF ACCOUNT மற்றும் மேற்படி வழக்கு சார்ந்த சில முக்கிய ஆவணங்கள் கிடைக்கப் பெறாத காரணத்தாலும், மேற்படி வழக்கு கோப்பு அலுவலக மற்ற வழக்கு கோப்பில் கலந்துவிட்ட காரணத்தாலும், மேற்படி குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் சம்மந்தமாகவும் எ.த.சா.2–ஐ மீண்டும்

அழைத்து மனுதாரர்/எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரனைய செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது,

7. மேற்படி மனுதாரர் தரப்பில் மனுதாரரின் வங்கி சேமிப்பு கணக்கின் Statement இந்த வழக்கை தீர்மானிக்க முக்கிய ஆவணம் என்பதாலும், எதிர் மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்காத காரணத்தாலும், எ.த.சா.2–யை மீண்டும் அழைத்து விசாரிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்பதாலும் இந்நீதிமன்றம் இம்மனுவை அனுமதிக்கவேண்டியது அவசியமானதாகும் என்ற கருதுகிறது .

8. எனவே எ.த.சா–2–ஐ குறுக்கு விசாரணை செய்து தான் மேற்படி சங்கதிகளை நிரூபிக்க வேண்டும் என்ற மனுதாரரின் கோரிக்கையானது ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. மேலும் எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணையின் போது, மனுதாரர் எ.த.சா–2 க்கு செலவுத்தொகையாக ரூ.500/– செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இறுதியாக மனு அனுமதி செய்யப்படுகிறது.

என்னால் சொல்லப்பட்டதை, தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மே மாதம் 11–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

Sd/– **M. Suriyakumar, B.A., LL.B.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்**
**நடுவர், போச்சம்பள்ளி.**